# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**29.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. ஓய்வு பெற்ற நீதிபதி சத்யநாராயணன் தலைமையில் கமிட்டி

- மேல்சபை **எம்.பி. சுசில் குமார் மோடி** தலைமையில் சட்டம் மற்றும் நீதித்துறை நாடாளுமன்ற நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த குழு **இந்து வாரிசு உரிமைச் சட்டம், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் சட்டங்கள்** உள்ளிட்ட தனிநபர் சட்டங்களை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பும்படி அனைத்து மாநில அரசுகளுக்கும் கடிதம் அனுப்பி உள்ளது.
- அதில் எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்டோரின் கருத்தை கேட்டறிய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- இதையடுத்து தனிநபர் சட்டங்களை ஆய்வு செய்ய ஐகோர்ட் ஓய்வு பெற்ற நீதிபதி எம்.சத்யநாராயணன் தலைமையில் கமிட்டியை அமைத்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

### 2. கிராம சபையை கண்காணிக்க புதிய மென்பொருள்

- கிராம சபை கூட்ட நிகழ்வுகளை கண்காணிக்க **'நம்ம கிராம சபை'** என்ற பெயரில் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் ஒன்றாம் தேதி உள்ளாட்சிகள் தினமாக கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது.
- இதன்படி வரும் **நவம்பர் ஒன்றாம் தேதி உள்ளாட்சிகள் தினம்** கொண்டாடப்பட உள்ளது.
- சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவி குழுக்களை கௌரவித்தல், **அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், கலைஞர் வீடு வழங்கும் திட்டம், ஜல்ஜீவன் இயக்கம்** போன்றவை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளன.

## மத்திய செய்திகள்

### 1. ஐநா சிறப்பு மாநாடு

- பயங்கரவாதத்தை ஒருபோதும் சகித்துக் கொள்ளாமல் அதற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா. பயங்கரவாத தடுப்புக் குழுவின் சிறப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகளாக **அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா, பிரான்ஸ்** ஆகியவை உள்ளன. அந்த கவுன்சிலின் பத்து நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.
- இந்தியாவின் பதவிக்காலம் வரும் டிசம்பருடன் நிறைவடைகிறது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத தடுப்புக் குழுவின் தலைமை பொறுப்பையும் இந்தியா வகுத்து வருகிறது.

- அக்குழுவின் சிறப்பு மாநாடு முதல் முறையாக இந்தியாவில் நடைபெற்றது. மாநாட்டில் **'தில்லி தீர்மானம்'** நிறைவேற்றப்பட்டது.
- **அந்த தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது:**
  - **பயங்கரவாதத்தையும், பயங்கரவாதத்துக்கு நிதி திரட்டப்படுவதையும் தடுப்பதற்கு நாடுகள் முக்கியத்துவம் அளித்து செயல்பட வேண்டும்.**
  - **பயங்கரவாதத்தை ஒருபோதும் சகித்துக் கொள்ளாமல் அதற்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.**

### 2. கிரையோஜெனிக் என்ஜின் சோதனை வெற்றி

- **திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறு** அருகே **மகேந்திரகிரி இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில்** நடைபெற்ற கிரையோஜெனிக் என்ஜின் சோதனை வெற்றிகரமாக முடிந்தது.
- இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் 36 செயற்கை கோள்களை **எல்விஎம்-3 எம்-3 என்ற ராக்கெட்** மூலம் எடுத்துச் சென்று விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.
- இந்த ராக்கெட்டில் **சிஇ-20** எஞ்சின் தான் பொருத்தப்பட்டு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

### 3. தகவல் தொழில்நுட்ப திருத்த விதிமுறைகள்-2022

- சமூக ஊடகங்களில் சட்டவிரோத கருத்துக்கள் மற்றும் பொய்யான பதிவுகளை தடுப்பதில் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின் வாயிலாக அந்நிறுவனங்களுக்கு கூடுதல் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் **ராஜீவ் சந்திரசேகர்** தெரிவித்தார்.
- சமூக ஊடக பயனாளர்கள் அளிக்கும் புகார்களுக்கு தீர்வு காண அரசு தரப்பில் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் குழுக்கள் அமைக்க விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பயனாளர்கள் அளிக்கும் **புகாரை 24 மணி நேரத்துக்குள் பதிவு செய்து 15 நாட்களுக்குள்** இக்குழுக்கள் தீர்வு காண வேண்டும்.
- புகாருக்கு உள்ளான வீடியோ தகவல்கள் ஆகியவை **புகார் தீர்க்கப்பட்ட 72 மணி நேரத்துக்குள்** சமூக ஊடகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.